1978 மார்ச் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்கள் ஓடுகின்ற பல வழித்தடங்களிலும் தனியார் பஸ்களும் ஓடுகின்றன. அதற்கான அனுமதிக்கப்பட்ட காலநேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நேஷனலைஸ் செய்கின்ற முறையில் படிப்படியாக நடவடிக்கை எடுத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தோடு சேர்ந்து நாட்டுடைமையாக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

அ. இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுப்பது குறித்து.

[முற்பகல் 10-00.]

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், பிரம் தி லேனர்ட் அவுஸ் புளோர் லீடர், இந்த மேஜையின்மீது நீதிபதி இஸ்மாயில் அவர்களின் விசாரணைக் கமிஷன் ரிபோர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரணைக் கமிஷன் ரிப்போர்டிலே சில குற்றச்சாட்டுகள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மிசாக் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? அப்படி நடவடிக்கை எடுக்கும் போது இந்த அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்படுவார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தலைவர்கள் மத்தியிலே ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஏற்கனவே இதைப் பற்றி அறையிலே பேசி யிருக்கிறார்கள். எனவே, குறிப்பிட்ட சிலவற்றை வைத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்பது எந்த அடிப்படையிலே தகவல் கோருவதாக ஆகும்? என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ஏ. ரகுமான் கான் : சர்க்கார் என்ன நடவடிக்கை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். துரை முத்துசாமி.